# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 134/ந/2024

நாள். 28.05.2025

திரு.R.மயில்சாமி,
புதுவிளாங்குடி, மதுரை – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையாளர்,
மேலூர் நகராட்சி, மேலூர். – எதிர்மனுதாரர்

மதுரை மாவட்டம், மதுரை, புது விளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, பிளாட் எண்.5, என்கிற முகவரியில் வசிக்கும் திரு. R.மயில்சாமி என்பவரின் 05.10.2023 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 09.10.2023 அன்று பெறப்பட்டு, 134/ந/2024 எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

மதுரை மாவட்டம், மதுரை, புது விளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, பிளாட் எண்.5, என்கிற முகவரியில் வசிக்கும் திரு. R.மயில்சாமி என்பவர் தமது 05.10.2023 நாளிட்ட மனுவில் கீழ்க்கண்டவாறு புகார் தெரிவித்துள்ளார்:

மதுரை மாவட்டம், மேலூர் நகராட்சி, மேலூர் பேருந்து நிலையம் அருகில் திருச்சி மெயின் ரோட்டில் கதவு எண்.712–ல் இயங்கி வரும் மேலூர் மெடிக்கல் சென்டர் மருத்துவமனை கட்டிடம் மூன்று மாடிகளை கொண்டதும், பல படுக்கை அறைகள் உள்ள மருத்துவமனை 24 x 7 மணி நேரமும் செயல்பட்டு வருகிறது. மேற்படி மருத்துவமனை கட்டிடம் வரைபட அனுமதிக்கு மாறாக கூடுதலாக கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. மேலும் இம்மருத்துவமனைக்கு நான்கு புறமும் இடைவெளி இடம் விடாமல் (set back spaces) விடாமல் சட்டத்திற்கு மாறாக கட்டடம் கட்டப்பட்டுள்ளது. மேலும் மேலூர் மெடிக்கல் சென்டர் மருத்துவமனைக்கு வாகனங்கள் நிறுத்துவதற்கு இடம்

விடாமல் கட்டடம் கட்டப்பட்டுள்ளதால் மருத்துவமனைக்கு வரும் உள்நோயாளிகள், புறநோயாளிகள் மற்றும் பார்வையாளர்கள் வாகனங்களை மருத்துவமனைக்கு முன்பாக ரோட்டில் நிறுத்திவிடுவதனால் போக்குவரத்து நெரிசல் மிகவும் ஏற்பட்டு சிறியவர்கள் முதல் பெரியவர்கள் மற்றும் மாணவ மாணவியர்கள் நடந்து செல்வதற்கு மிகவும் சிரமப்பட்டு வருகிறார்கள். இதுகுறித்து புகார்மனுவை மேலூர் நகராட்சி ஆணையர் அவர்களுக்கு 21.09.2023 தேதியில் பதிவு தபாலில் (RT 475886 925 IN) அனுப்பியிருந்தும் நடவடிக்கை எடுக்காமலும், கட்டடத்தை கண்காணிக்கத் தவறிய சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது துறைரீதியான கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க உத்தரவிடுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலும் மேலூர் மெடிக்கல் சென்டர் மருத்துவமனை பொதுமக்கள் பயன்பாட்டு கட்டடம் என்பதால் தமிழ்நாடு பொது கட்டிடங்கள் (உரிமம்) சட்டம் 1965 பிரிவு 2 (8)ன்படி வருவாய்துறையிடம் முறையாக உரிமம் பெறாமலும் மேலும் உரிய அரசு துறைகளிடம் அனுமதி பெறாமல் சட்டத்திற்கு புறம்பாக செயல்பட்டு வருகிறது. மேலும் பொதுமக்கள் பயன்பாட்டு கட்டிடம் என்பதால் 1973 ஆம் ஆண்டைய தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 33–ன்படி அக்கட்டிடத்திற்கு நகர் ஊரமைப்பு திட்ட இயக்ககத்தால் ஒப்புத6ல் பெறாமலும் மருத்துவமனை செயல்பட்டு வருகிறது.

எனவே, மேலூர் மெடிக்கல் சென்டர் மருத்துவமனை கட்டிடம் அனுமதிக்கு மாறாக கூடுதல் கட்டடம் கட்டியும், அவசர கால வழி விடாமலும் (Emergency Exit) வாகனங்கள் நிறுத்துவதற்கு (parking spaces) இடம் விடாமலும், மருத்துவமனைக் கட்டடத்திற்கு நான்குபுறமும் அரசு விதிகளின்படி 6 மீட்டர் இடைவெளி இடம் (set back spaces) விடாமலும் உரிய அரசு துறைகளிடம் அனுமதி பெறாமல் சட்டத்திற்கு புறம்பாக செயல்பட்டு வரும் மருத்துவமனை கட்டிடத்தை அரசாணை எண்.7, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள். 10.01.2023 மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் எண்.21724/2016/BA 2 நாள்.3.1.2017–ன் உத்தரவின்படி தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 1971–ன் பிரிவுகள் 56(1) மற்றும் 57–ன் உடன் படிக்கப்பட்ட பிரிவு 85–ன் கீழ் stop work notice/notice calling for approved plan அறிவிப்பினையும் அதன் தொடர்ச்சியாக வழங்கப்பட வேண்டிய மூடி முத்திரையிட்டும் lock and seal and demolition வழங்கி மற்றும் விரைவான அமலாக்க நடவடிக்கை எடுக்க உத்தரவிடுமாறு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை கேட்டுக்கொண்டுள்ளார்.

2. மனுதாரரின் புகார் மனு மீது விரிவான அறிக்கை கோரி இம்முறைமன்ற நடுவ 19.01.2024 நாளிட்ட கடிதம் மூலம் மேலூர் நகராட்சி ஆணையாளர் கோரப்பட்டார்.

3. மேலூர் நகராட்சி ஆணையாளர் தனது 04.10.2024 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தனது விளக்கத்தினை சமர்ப்பித்துள்ளார்.

மேலூர் திருச்சி மெயின் ரோட்டில் உள்ள மேலூர் மெடிக்கல் சென்டர் கட்டிடத்திற்கு 2831 சதுர அடி இடத்தில் மேலூர் நகராட்சி மூலம் கீழ்க்கண்டவாறு கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வரிசை எண். | கட்டிட அனுமதி எண். | கட்டிட அனுமதி விபரம் | அனுமதி காலம் |
|---|---|---|---|
| 1. | 100/99 | தரைதளம் 2394.87 ச.அடி<br>முதல் தளம் 1650.00 ச.அடி<br>இரண்டாம் தளம் 262.50 ச.அடி | 10.09.1999 முதல் 09.09.2002 வரை |
| 2. | 121/09 | கூடுதல் முதல் தளம் 737.50 ச.அடி<br>கூடுதல் இரண்டாம் தளம் 737.50 ச.அடி | 24.07.2009 முதல் 23.07.2012 வரை |
| 3. | 6/2015 | கூடுதல் தரை தளம் 870.00 ச.அடி<br>கூடுதல் முதல் தளம் 870.00 ச.அடி<br>கூடுதல் இரண்டாம் தளம் 196.00 ச.அடி | 10.02.2015 முதல் 09.02.2018 வரை |

மேற்படி கட்டிடத்திற்கு 2015–ம் ஆண்டு கட்டிட அனுமதி வழங்கியபோது கட்டிட அனுமதி வரைபடத்தின்படி முன்பக்கத்திறவிடம் 4' 3" (அடி), பக்கத்திறவிடம் இருபுறம் 13' அடி மற்றும் பின்பக்கத்திறவிடம் 5' 10½ அடி அளவில் இடைவெளிவிடப்பட்டு கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி கட்டிடம் 1999ம் வருடம் மெட்ராஸ் மேற்கூரை கட்டிடமாக இயங்கி பல மாறுதல்களுடன் சுமார் 30 வருடங்களாக இயங்கி வருவதாக தெரிய வருகிறது. மேற்படி மேலூர் மெடிக்கல் சென்டர் மருத்துவமனை தமிழ்நாடு அரசு மருத்துவம் மற்றும் சுகாதார துறை இயக்குநர் அவர்களின் பதிவு எண். MADUALL 20210023316–ன்படி அனுமதி பதிவு பெற்று இயங்கி வருகின்றது என்ற விவரத்தை தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் திரு.R.மயில்சாமி அவர்களையும் மற்றும் எதிர்மனுதாரரான மேலூர் நகராட்சி ஆணையர் ஆகியோரை 08.10.2024 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெறவிருக்கும் விசாரணைக்கு வருகை தந்து விளக்கம் அளிக்குமாறு இம்முறைமன்ற நடுவ 13.09.2024 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் திரு.R.மயில்சாமி 08.10.2024 ம் தேதிய விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

“மதுரை மாவட்டம், மேலூர் நகராட்சிக்குட்பட்ட திருச்சி மெயின் ரோட்டில் உள்ள கதவு எண்.712–ல் இயங்கி வரும் மேலூர் மெடிக்கல் சென்டர் மருத்துவமனை வரைபடத்தில் அனுமதி அளிக்கப்பட்டதை விட கூடுதலாக கட்டிடம் கட்டப்பட்டும், கட்டிடத்திற்கு தமிழ்நாடு நகர் ஊரமைச்சட்டம் 1971–ன் பிரகாரம் முறையான அனுமதி பெறாமல் இருப்பதாக தகவல் உரிமைச்சட்டம் 2005–ன் மூலம் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் , மதுரை மாவட்டத்தின் அலுவலக 22.11.2023 நாளிட்ட கடிதம் மூலம் தெரிய வருகிறது.

மேற்படி கட்டிடத்திற்கு நான்குபுறமும் (side set back) பக்கவாட்டில் இடைவெளியிடம் ஆம்புலன்ஸ் மற்றும் தீயனைப்பு மீட்புத்துறை வாகனம் செல்ல அரசு விதிகளின்படி இடம் விடாமலும் மருத்துவமனைக்கு வரும் வாகனங்களுக்கு கார் பார்க்கிங் இடம் விடாமலும், சட்டத்திற்கு புறம்பாக

கட்டடம் கட்டப்பட்டுள்ளதால் தமிழ்நாடு நகர் ஊரமைப்புச்சட்டம் 1971 பிரிவு 56 & 57 மற்றும் 80A–ன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தும் Lock and seal and demolition G.O.Ms.No.07 Housing and Urban Development UD4(1) Department dt. 10.01.2023–ன்படி மருத்துவமனை கட்டிடத்தின் மீது நடவடிக்கை எடுத்தும், மேலும் இதுநாள் வரையிலும் எனது மனுவிற்கு நடவடிக்கை எடுக்காமல் அரசாணை எண். G.O. Ms.No. 99 Personnel and Administrative Reforms (A) Deprtment dt. 21.09.2015–ன்படி பின்பற்றாமலும் மெடிக்கல் சென்டர் மருத்துவமனை கட்டிடத்தை கண்காணிக்கத் தவறியும் இதுநாள் வரையிலும் நடவடிக்கை எடுக்காமல் இருந்த முன்னாள் இந்நாள் நகராட்சி ஆணையாளர் மற்றும் அதில் சம்மந்தப்பட்ட தொடர்புடைய அனைத்து அலுவலர்கள் மீதும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு முறைமன்ற நடுவத்தைக் கேட்டுக்கொள்கிறேன்".

மேலும் 05.10.2023 நாளிட்ட எனது மனுவில் கூறப்பட்டுள்ள விவரங்களை எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறைமன்ற நடுவத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

- மேற்படி மேலூர் மெடிக்கல் சென்டர் மருத்துவமனை அரசு விதிமுறைகளுக்கு மாறாக கட்டப்பட்டுள்ளது. தமிழ்நாடு நகர் ஊரமைப்புச்சட்டம் 1971 பிரிவு 56 & 57 மற்றும் 80A–ன்படி நடவடிக்கை எடுக்க (Lock and seal and demolition) இம்முறைமன்ற நடுவத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

- மேலும் எனது மனுவிற்கு நடவடிக்கை எடுக்காமல் அரசாணை G.O. Ms.No.99 Personel and Administrative Reforms(A) Department dt. 21.09.2015-ன்படி அரசு விதிகளை பின்பற்றாமலும், மெடிக்கல் சென்டர் மருத்துவமனை கட்டிடத்தை கண்காணிக்கத் தவறிய முன்னாள் இந்நாள் நகராட்சி ஆணையாளர் மற்றும் தொடர்புடைய நகராட்சி அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும்படி இம்முறைமன்ற நடுவத்தைக் கேட்டுக்கொள்கிறேன்".

6) மேலூர் நகராட்சி ஆணையாளர் சார்பாக நகரமைப்பு ஆய்வாளர் மற்றும் மேலாளர் இருவரும் 08.10.2024 அன்று நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தினை சமர்ப்பித்துள்ளனர்.

மேலூர் திருச்சி மெயின் ரோட்டில் உள்ள மேலூர் மெடிக்கல் சென்டர் கட்டிடத்திற்கு 2831 ச.அடி இடத்தில் மேலூர் நகராட்சி மூலம் கீழ்க்கண்டவாறு கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வரிசை எண். | கட்டிட அனுமதி எண். | கட்டிட அனுமதி விபரம் | அனுமதி காலம் |
|---|---|---|---|
| 1. | 100/99 | தரைதளம் 2394.87 ச.அடி<br><br>முதல் தளம் 1650.00 ச.அடி<br>இரண்டாம் தளம் 262.50 ச.அடி | 10.09.1999 முதல் 09.09.2002 வரை |

| | | | |
|---|---|---|---|
| 2. | 121/09 | கூடுதல் முதல் தளம் 737.50 ச.அடி<br>கூடுதல் இரண்டாம் தளம் 737.50 ச.அடி | 24.07.2009 முதல்<br>23.07.2012 வரை |
| 3. | 6/2015 | கூடுதல் தரைதளம் 870.00 ச.அடி<br>கூடுதல் முதல் தளம் 870.00 ச.அடி<br>கூடுதல் இரண்டாம் தளம் 196.00 ச.அடி | 10.02.2015 முதல்<br>09.02.2018 வரை |

மேற்படி கட்டிடத்திற்கு 2015ம் ஆண்டு கட்டிட அனுமதி வழங்கியபோது கட்டிட அனுமதி வரைபடத்தின்படி முன்பக்கத்திறவிடம் 4"3" (அடி) பக்கத்திறவிடம் 1.3" (அடி) மற்றும் பின் பக்கத்திறவிடம் 5'.10½ அடி அளவில் இடைவெளி விடப்பட்டு கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி கட்டிடம் 1990ம் வருடம் மெட்ராஸ் மேற்கூரை கட்டிடமாக இயங்கி பல மாறுதல்களுடன் சுமார் 30 வருடங்களாக இயங்கி வருவதாக தெரிய வருகிறது. மேற்படி மேலூர் மெடிக்கல் சென்டர் மருத்துவமனை தமிழ்நாடு அரசு மருத்துவம் மற்றும் சுகாதார துறை இயக்குநர் அவர்களின் பதிவு எண். M,ADUALL 20210023316–ன்படி அனுமதி பெற்று இயங்கி வருகின்றது என்ற விவரம் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்கப்படுகின்றது.

மேற்படி மருத்துவமனை கட்டிடத்திற்கு தற்போது நடைமுறையில் உள்ள நகர் ஊரமைப்பு சட்ட விதிகளின்படி உரிய அனுமதி பெற்றுக்கொள்ள கட்டிட உரிமையாளருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது என்ற விவரம் இம்முறைமன்ற நடுவத்தில் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

- தற்போது மேலூர் மெடிக்கல் சென்டர் கட்டிடம் ஒருங்கிணைந்த தமிழ்நாடு கட்டிட விதி 2022–ன்படி மற்றும் நகர் ஊரமைப்பு சட்ட விதிகளின்படி வாகனம் நிறுத்துவதற்கு போதிய இடவசதி இல்லாதது குறித்து கட்டிட உரிமையாளருக்கு முறையாக 15 தினங்களுக்குள் அறிவிப்பு அனுப்பப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
- மேற்படி மேலூர் மெடிக்கல் சென்டர் மருத்துவமனை இயங்கி வரும் கட்டிடத்திற்கு தற்போதைய சட்ட விதிகளின்படி நகர் ஊரமைப்பு துறையிடம் அனுமதி பெறப்பட வேண்டும் என்று கட்டிட உரிமையாளரிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- மனுதாரருக்கு இப்பொருள் தொடர்பாக தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

7) மேலூர் மெடிக்கல் சென்டர் உரிமையாளரை 12.12.2024 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெற உள்ள விசாரணைக்கு ஆஜராகும்படி 28.11.2024 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது. மேற்படி உரிமையாளர் தனது 12.12.2024 நாளிட்ட மின்னஞ்சலில் அன்றைய தினம் தன்னால் விசாரணைக்கு ஆஜராக இயலவில்லை என தெரிவித்து பிரிதொரு நாள் விசாரணைக்கு அழைக்கும்படி கோரியுள்ளார். அவரது கோரிக்கையை ஏற்று 19.12.2024 நடைபெறும் விசாரணைக்கு அவரை ஆஜராகும்படி 13.12.2024 நாளிட்ட கடிதம் அனுப்பப்பட்டது.

8) மேற்படி மேலூர் மெடிக்கல் சென்டர் உரிமையாளரின் சார்பாக திரு தே.மலைவீரன் என்பவர் 19.12.2024 அன்றைய விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்ட தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

"முறையீட்டு மனு எண்.134/ந/2024 தொடர்பாக மனுதாரர் திரு.R.மயில்சாமி என்பவர் 05.10.2023 நாளிட்ட புகார் மனு மருத்துவமனையின் முகவரிக்கு பெறப்படவில்லை என தெரிவித்துக்கொள்கிறேன். மனுதாரரின் புகார் மனுவின் நகல் பெற்றுக்கொள்கிறேன்.

- மேலூர் மெடிக்கல் சென்டர் என்கிற மருத்துவமனையானது, மேலூர் நகராட்சியால் உரிய வரைபட அனுமதி பெறப்பட்டு, அதன்படி கட்டிடம் கட்டி செயல்பட்டு வருகிறது.
- மருத்துவமனையில் மேற்கு பக்கம் தவிர மற்ற மூன்று பக்கங்களிலும் போதிய இடவசதி (set back) விடப்பட்டுள்ளது.
- மருத்துவமனையிலிருந்து சுமார் 100 அடி தொலைவில் மருத்துவமனைக்கு வரும் நோயாளிகள்/பார்வையாளர்களின் வாகனங்களை நிறுத்துவதற்கு வசதியாக (parking space) எங்களது சொந்த இடத்தில் போதிய இடவசதி செய்து கொடுக்கப்பட்டு வாகனங்கள் நிறுத்தப்படுகின்றன.

எனவே சட்ட விதிகளுக்குட்பட்டு மேற்படி மேலூர் மெடிக்கல் சென்டர் என்கிற மருத்துவமனை நன்முறையில் செயல்பட்டு வருகிறது என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்".

9) மனுதாரரின் புகார் மனு மற்றும் மனுவுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள் மற்றும் அவரது வாக்குமூலம், மேலூர் நகராட்சி ஆணையரின் அறிக்கை, நகராட்சி நகரமைப்பு ஆய்வாளர் மற்றும் மேலாளர் இருவரின் வாக்குமூலம், மற்றும் ஆவணங்கள் மற்றும் மேலூர் மெடிக்கல் சென்டர் உரிமையாளர் Dr.பூபதி அவர்களின் சார்பாக விசாரணைக்கு ஆஜரான தே.மலைவீரன் என்பவரின் வாக்குமூலம் ஆகிய அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் மிகக் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

மனுதாரர் மேலூர் நகராட்சிக்குட்பட்ட கதவு எண்.712, திருச்சி மெயின் ரோட்டில் அமைந்துள்ள மேலூர் மெடிக்கல் சென்டர் என்கிற மருத்துவமனையானது வரைபடத்தில் அனுமதி அளிக்கப்பட்டதை விட கூடுதலாகவும், கட்டிடத்திற்கு போதிய இடைவெளியின்றியும் (set back spaces) வாகன நிறுத்துமிடம் வசதியின்றியும் (parking space), மேலும் அவசர வழி (emergency exit) விடாமலும் கட்டிடத்தை கட்டியிருப்பதால் தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 1971–ன் பிரிவுகள் 56(1) மற்றும் 57–ன் உடன் படிக்கப்பட்ட பிரிவு 85–ன் கீழ் stop work notice/notice calling for approved plan அறிவிப்பினை வழங்கி அதன் தொடர்ச்சியாக வழங்கப்படவேண்டிய மூடி முத்திரையிட்டும் lock and seal and demolition வழங்கி நடவடிக்கை எடுக்க கோரியுள்ளார்.

மேலூர் திருச்சி மெயின்ரோட்டில் உள்ள மேலூர் மெடிக்கல் சென்டர் கட்டிடத்திற்கு 2831 சதுர அடி இடத்தில் மேலூர் நகராட்சி மூலம் கீழ்க்கண்டவாறு கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வரிசை எண். | கட்டிட அனுமதி எண். | கட்டிட அனுமதி விபரம் | அனுமதி காலம் |
|---|---|---|---|
| 1. | 100/99 | தரைதளம் 2394.87 ச.அடி<br>முதல் தளம் 1650.00 ச.அடி<br>இரண்டாம் தளம் 262.50 ச.அடி | 10.09.1999 முதல் 09.09.2002 வரை |
| 2. | 121/09 | கூடுதல் முதல் தளம் 737.50 ச.அடி<br>கூடுதல் இரண்டாம் தளம் 737.50 ச.அடி | 24.07.2009 முதல் 23.07.2012 வரை |
| 3. | 6/2015 | கூடுதல் தரைதளம் 870.00 ச.அடி<br>கூடுதல் முதல் தளம் 870.00 ச.அடி<br>கூடுதல் இரண்டாம் தளம் 196.00 ச.அடி | 10.02.2015 முதல் 09.02.2018 வரை |

மேலூர் மெடிக்கல் சென்டர் கட்டிடத்திற்கு 2015ம் ஆண்டு கட்டிட அனுமதி வழங்கியபோது கட்டிட அனுமதி வரைபடத்தின்படி முன்பக்கத்திறவிடம் 4' 3" அடி பக்கத்திறவிடம் 1' 3" அடி மற்றும் பின் பக்கத்திறவிடம் 5' 10½" அடி அளவில் இடைவெளி விடப்பட்டு கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளதும், மேற்படி கட்டிடம் 1990ம் வருடம் மெட்ராஸ் மேற்கூரை கட்டிடமாக இயங்கி பல மாறுதல்களுடன் சுமார் 30 வருடங்களாக இயங்கி வருவதையும், மேலூர் மெடிக்கல் சென்டர் மருத்துவமனை தமிழ்நாடு அரசு மருத்துவம் மற்றும் சுகாதார துறை இயக்குநர் அவர்களின் பதிவு எண். MADUALL 20210023316–ன்படி அனுமதி பெற்று இயங்கி வருகின்றது என்பதும் நகராட்சி ஆணையர் அறிக்கை மற்றும் நகரமைப்பு ஆய்வாளர், மேலாளர் இருவரின் வாக்குமூலத்திலிருந்து தெரிய வருகிறது.

மேலும் மேற்படி மேலூர் மெடிக்கல் சென்டர் கட்டிடம் 1999ம் வருடத்திலிருந்து மெட்ராஸ் மேற்கூரை கட்டிடமாக இயங்கி பல மாறுதல்களுடன் சுமார் 30 வருடங்களாக இயங்கி வருவதையும், அக்கட்டிடம் தமிழ்நாடு அரசு மருத்துவம் மற்றும் சுகாதார துறை இயக்குநர் அவர்களின் அனுமதி பெற்று இயங்கிவருவதையும் மேலூர் ஆணையரின் அறிக்கையிலிருந்து அறிய முடிகிறது.

மேலூர் மெடிக்கல் சென்டர் மருத்துவமனையின் சார்பாக 19.12.2024 அன்றைய விசாரணையில் தே.மலைவீரன் என்பவர் ஆஜராகி மேலூர் மெடிக்கல் சென்டர் என்கிற மருத்துவமனையானது, மேலூர் நகராட்சியால் உரிய வரைபட அனுமதி பெறப்பட்டு, அதன்படி கட்டடம் கட்டி செயல்பட்டு வருகிறது என்றும், மருத்துவமனையில் மேற்கு பக்கம் தவிர மற்ற மூன்று பக்கங்களிலும் போதிய இடவசதி (set back) விடப்பட்டுள்ளது என்றும், மருத்துவமனையிலிருந்து சுமார் 100 அடி தொலைவில் மருத்துவமனைக்கு வரும் நோயாளிகள்/பார்வையாளர்களின் வாகனங்களை நிறுத்துவதற்கு வசதியாக (parking space) அவர்களது சொந்த இடத்தில் போதிய இடவசதி செய்து கொடுக்கப்பட்டு வாகனங்கள் நிறுத்தப்படுகின்றன என்றும், சட்ட

விதிகளுக்குட்பட்டு மேலூர் மெடிக்கல் சென்டர் என்கிற மருத்துவமனை நன்முறையில் செயல்பட்டு வருகிறது என்பதையும், இவரது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் மேலூர் மெடிக்கல் சென்டர் கட்டிடத்திற்கு, மேலூர் நகராட்சியால் வழங்கப்பட்டுள்ள கட்டிட அனுமதி, நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்.ந.க.9862/10பிஎ1, நாள் 14.06.2010–ல் வழங்கப்பட்டுள்ள ஆணையின்படி வழங்கப்பட்டுள்ளதா என்பதை கண்டறிந்து, உள்ளாட்சி அதிகார வரம்பினை மீறி அனுமதி வழங்கியிருக்கும் பட்சத்தில், சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்க நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களுக்கு பரிந்துரைத்து ஆணையிடப்படுகிறது.

மேலும், மேலூர் மெடிக்கல் சென்டர் கட்டிடம் ஒரு மருத்துவமனை கட்டிடம் என்பதால், தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள் 2019–ன்படி, குறிப்பாக, இணைப்பு IX – Regulations for Special Provisions for Hospital Buildings மற்றும் இணைப்பு IV–ன்படி முறையாக பின்பற்றப்பட்டு கட்டிடம் அமைக்கப்பட்டுள்ளதா என்பதையும் கள ஆய்வு செய்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள மேலூர் நகராட்சி ஆணையரை அறிவுறுத்துமாறும் மதுரை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களுக்கு அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2025 ஆம் ஆண்டு, மே திங்கள் 28 –ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.R.மயில்சாமி,
த/பெ.திரு.இராமலிங்கம்,
பிளாட் எண்.5, அய்யப்பன் தெரு,
செம்பருத்தி நகர், புதுவிளாங்குடி,
மதுரை – 625 018.

2) நகராட்சி ஆணையர்,
மேலூர் நகராட்சி,
மேலூர்.
மதுரை மாவட்டம்.

3) திரு.நிறுவனர்/உரிமையாளர்,
மேலூர் மெடிக்கல் சென்டர் மருத்துவமனை கட்டிடம்,
எண்.712, திருச்சி மெயின்ரோடு,
பேருந்து நிலையம் அருகில்,
மேலூர். மதுரை மாவட்டம்.

4) நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,
மதுரை.

5) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

6) ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

2/6/25
செயலாளர்

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032